ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்கிறதா ? இல்லை யென்றால் இனிமேலாவது அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதுதான் அதற்குப் பதில் அளித்தேன்.

முந்திரித் தொழிற்சாலை

*68 வின—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் அரசாங்கத்தாலும் பொதுமக்களாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் முந்திரி சாகுபடி செய்யப்படுவதால் அந்த ஜில்லாக்களில் ஏதாவது ஒரு இடத்தில் முந்திரிக் கொட்டை உடைக்கும் தொழிற்சாலையும் உடைக்கப்பட்ட முந்திரி தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அவைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பண்ணுருட்டியில் இரண்டு நவீன முந்திரி தொழிற்சாலைகள் அமைக்கும் சாத்தியக்கூறு பற்றி தமிழ்நாடு விவசாய தொழில் கழகம் மத்திய அரசு சிறு தொழில் பணிமனை இயக்குநருடனும், தமிழ்நாடு தொழில் வணிகத்துறை இயக்குநருடனும் கலந்து ஆராய்ந்து வருகிறது. விஷயம் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருந்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், எத்தனை நாட்களுக்கு இந்த ஆராய்ச்சி நடக்கும் ? எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவிலேயே முடிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் முந்திரிக் கொட்டை உடைக்கும் பல தொழிற்சாலைகள் இப்பொழுது இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கம் கொடுக்காதீர்கள், கேள்வியாகக் கேளுங்கள்.

1973 ஆகஸ்ட் 11]

திரு. ஜே. ஜேம்ஸ்: அதில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் முந்திரிக் கொட்டையிலிருந்து வரும் எண்ணெயினால் பாதிக்கப்பட்டு பல நோய்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, இதை மாற்ற அதனை நடத்தும் முதலாளிகள் இந்த நோய்கள் பரவாமல் தடுக்க மாற்றுத் திட்டங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புதிய தகவல் ஒன்றைத் தருகிறார்கள். அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. என். கணபதி: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கந்தர்வக் கோட்டையைச் சுற்றி நிறைய முந்திரித் தோட்டங்கள் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தி அங்கே முந்திரித் தொழிற்சாலையை ஆரம்பிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எங்கெங்கே இப்படிப்பட்ட வசதி வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் பரிசீலிக்கலாம்.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, உடையார்பாளையத்தில் ஏராளமான சர்க்கார் காடுகள் இருப்பதால் அங்கே ஒரு ஆராய்ச்சி சாலையும், உடைப்புச் சாலையும் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் முந்திரி வளர்கிறது.

கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி

*69 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் ஏதேனும் தமிழகத்தில் தற்போது செயல்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்?

(உ) பயிற்சி நிலையத்தை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம். கிண்டியில் ஒரு பயிற்சி நிலையம் செயல்படுகிறது.

(இ) ஒரு அணியில் 20 மாணவர்களுக்கு மேற்படாமல் இரண்டு அணிகளில், மாணவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி பெறுகிறார்கள்.

(உ) பயிற்சி சம்பந்தப்பட்ட வரையில் விரிவாக்கும் திட்டம் இல்லை.